# பெண்ணுரிமைகள் கண்ணோட்டம்

## பெண்கள் செய்தி மடல் தை - ஆனி 2010

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல்: 13:2 ♀♀♀ 2011


**பெண்கள் தங்களுக்கெதிரான வன்முறைகளை வெவ்வேறு கோணங்களிலிருந்து எதிர்கொள்வதை இங்கு குறிப்பிடும் சம்பவங்களில் இருந்து அவதானிக்கலாம்.**


- சமூகப் பழிக்கு உள்ளாகும் பெண்கள்...(சம்பவம்... 29.01.2010. தாழங்குடா)
- அச்சுறுத்தல், ஆபத்தை எதிர் கொள்ளும் பெண்கள் (சம்பவம்... 30.01.2010. மயிலம்பாவெளி)
- சுற்றுச் சூழலில் மேலதிக பிரச்சனையை எதிர்கொள்ளும் பெண்கள் (சம்பவம்...07.06.2010, ஏறாவூர் )

எனினும் உதவி தேடிவரும் பெண்களை, "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்பது போல் திருப்பி அடிக்கும் செயற்பாடுகள் எம் மத்தியில் நிலவுவது மேலும் மேலும் அவர்களை வன்முறைக்கு இட்டுக் செல்லும் மிகவும் பயங்கர நிலையாகும்.

சம்பவம் ஒன்று தொடர்பாக ஒரு அமைப்பை அண்மையில் சந்தித்தபோது "இவளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா....இவளிலதான் குற்றம்...இவளிலதான் முழுப் பிழையும் .. நானும் அந்த ஊர்க்காரன்தான்...இவளுக்கு ஒரு கலியாணம் இல்ல.....".இன்னும் அந்த அலுவலகரின் வாய் நீண்டு கொண்டே சென்றது.

....பல்வேறு அமைப்புக்கள் இத்தனை வருடங்களாக பெண்களுக்குக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயற்பாடுகளில் வேலைகள் செய்து கொண்டிருந்தும் ...

**இன்னும் ஏன் பெண்களுக்குக்கெதிரான வன்முறைகள் குறையவில்லை ....**



**தை - ஆனி - 2010**

| | |
|---|---|
| பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வீட்டு வன்முறைகள் | - 84 |
| வெளி நபர்களால் பெண்கள், சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள் | - 24 |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| | 49 | சின்ன உப்போடை | வீடு | கணவர் | இப் பெண் குற்றம் சாட்டப்பட்டவரது இரண்டாவது மனைவியாவார். தற்போது கணவரும் தனது முதல் மனைவியின் பிள்ளைகளும் தன்னைக் கொடுமைப்படுத்துவதாக முறைப்பாடு செய்யும் பெண் தன்னையும் தனது பிள்ளையையும் காப்பாற்றும்படி கோருகிறார். |
| 04.01.2010 | 17 | கூழாவடி மட்டக்களப்பு | வீடு | வெளிநபர் | சிறுமியை திருமணம் செய்வதாகக் கூறி குற்றம் சாட்டப்பட்டவர் சிறுமியுடன் பழகிவந்துள்ளார். தற்போது இந் நபர் பழகுவதை நிறுத்தியுள்ளார். எனினும் சிறுமி மனநிலை பாதிக்கப்பட்டநிலையில் உள்ளார். |
| 08.01.2010 | 00 | தாழங்குடா | வீடு | கணவர் | திருமணம் முடித்து 5 வருடங்கள் கழிந்த நிலையில் தற்போது தன்னைக் கணவன் வேண்டாம் எனக் கூறுவதாக முறைப்பாடு செய்யும் பெண், தன்னைப் பார்ப்பதற்கு யாரும் இல்லாமல் கஸ்டப் படுவதால் கணவனைத் தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 11.01.2010 | 29 | திராய்மடு | வீடு | கணவர் | பெண்ணின் கணவர் பெண்ணைக் கைவிட்டு வேறு திருமணம் முடித்துள்ளார். இதனால் தானும் பிள்ளையும் கஸ்டப்படுவதாகவும் தங்களுக்கான பராமரிப்புச் செலவு தேவை எனவும் பெண் கோருகிறார். |
| 18.01.2010 | 24 | ஆரையம்பதி | வீடு | கணவர் | 5 வருடமாக வெளிநாட்டில் இருந்த கணவன் தற்போது நாடு திரும்பி 3 மாதம் கழிந்துள்ளது. எனினும் கணவன் இன்னும் வீட்டிற்கு வரவில்லை என முறைப்பாடு செய்யும் பெண் தானும் பிள்ளையும் மிகவும் சிரமப்படுவதால் தங்களுக்கு தாவரிப்புப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 18.01.2010 | 24 | சத்துருக் கொண்டான் | வீடு | வெளிநபர் | குற்றம் சாட்டப்பட்ட நபர் அரசின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகளை தனது விருப்பப்படி விற்று வந்ததை பொது மக்கள், உரிய அரச அதிகாரிகள் அனைவருக்கும் தான் அறிவித்ததாகவும் இதனால் குற்றம் சாட்டப்பட்டவர் கோபம் கொண்டு வீட்டில் யாருமில்லாத நேரத்தில் தன்னுடன் தகாத முறையில் நடக்க முற்பட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், தனிமையில் உள்ள தனக்கு நியாயம் பெற்றுத் தரும்படி கோருகின்றார். |
| 18.01.2010 | 34 | மஞ்சந் தொடுவாய் | வீடு | கணவர் | தன்னுடன் பிரச்சனையின்றி வாழ்ந்து வந்த கணவன், அவரது தாயார் வீட்டிற்கு சென்று இன்னும் திரும்பி வராமல் அங்கேயே தங்கிவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், பிள்ளையும் தானும் வருமானமின்றி கஷ்டப்படுவதால் கணவனைத் தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 18.01.2010 | 37 | நொச்சு முனை | வீடு | கணவர் | தன்னையும் பிள்ளைகள் ஐந்து பேரையும் கணவன் கைவிட்டுச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், படிப்பு, சாப்பாடு என அனைத்து விடயத்திலும் தானும் பிள்ளைகள் ஐவரும் வாழ மிகவும் சிரமப் படுவதால் கணவரிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 20.01.2010 | 26 | மட்டக்களப்பு | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டவர் இப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் முடித்துள்ளார். திருமணம் முடித்த பின் பெண்ணின் காணிகளை விற்று, சீட்டாடியும் குடித்தும் முடித்துவிட்டார். தற்போது அவரது தாயின் வீட்டில் கணவர் தங்கி விட்டதால் தானும் மூன்று பிள்ளை களும் மிகுந்த சிரமப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவரிடமிருந்து விவாகரத்தும் தாவரிப்பும் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 21.01.2010 | 24 | ஆரையம்பதி | வீடு | கணவர் | தன்னையும் பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்ற கணவர், தாவரிப்பாக வழங்கி வரும் பணம் தற் போதைய வாழ்க்கைச் செலவிற்குப் போதாமல் உள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவரிட மிருந்து தங்கள் வாழ்க்கைச் செலவுக்கு தகுந்த தொகையைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 22.01.2010 | 29 | செங்கலடி | வீடு | கணவர் | இப் பெண்ணின் கணவர் 10 வருடங்கள் இப் பெண் ணுடன் வாழ்ந்துள்ளார். ஒரு நாள் தொழிலுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் வீடு திரும்பவில்லை. தனது கணவர் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் சென்று விட்டதாகவும் அவர்கள் முகவரி தெரியாமல் உள்ள தாகவும் முறைப்பாடு செய்யும் பெண் தனக்கு நியாயம் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 25.01.2010 | 30 | ஆரையம்பதி | வீடு | கணவர் | திருமணம் முடித்து 4 மாதங்களில் கணவர் கைவிட்டுச் சென்றதாக முறைப்பாடு செய்யும் பெண் தனக்கு விவாகரத்துப் பெற்றுத் தரும்படி கோரு கின்றார். |
| 28.01.2010 | 48 | நாவற்குடா | வீடு | கணவர் | இப் பெண்ணின் கணவர் குடிப்பழக்கம் உடையவர். பெண்ணால் குற்றம் சாட்டப்பட்ட இந் நபர் குடித்து விட்டு பிள்ளைகளையும் மனைவியையும் தாக்கி யுள்ளார். அச் சமயம் தனது வீட்டில் இருந்த தங்கை மகன் கணவரைத் தடுத்ததாகவும் இதனால் தங்கையின் மகனில் கோபம் கொண்ட கணவன் மகனை "ஆயுதக் குழு உறுப்பினர்" என பொலிசில் முறைப்பாடு செய்து தங்களையும் அவ்வாறே சொல்லச் சொல்லி பலவந்தப்படுத்தி பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 29.01.2010 | 33 | தாழங்குடா | வீடு | கணவர் | தனது சகோதரி கருவுற்ற காலத்தில் சகோதரிக்கு உதவிக்காகச் சென்ற தன்னுடன் சகோதரியின் கணவர் கட்டாயப்படுத்தி பாலியல் உறவு கொண்ட தாகக் குறிப்பிடும் பெண், தான் கர்ப்பம் தரித்தவுடன் தன்னால் பிள்ளைக்குப் பொறுப்புக் கூற முடியாது என கைவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், பிள்ளைக்குப் பிறப்புப் பதிவு வைப்பதற்கு உதவி புரியுமாறு கோருகிறார். |
| 30.01.2010 | 28 | மயிலம்பா வெளி | வீடு | கணவர் | கணவரைப் பிரிந்து வாழும் தன்னைக் கணவன் வழிமறித்து கத்தியால் நான்கு இடங்களில் குத்திய தாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 02.02.2010 | 32 | கூழாவடி | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்ட நபர் தான் திருமணம் முடித் துள்ளதை மறைத்து இப் பெண்ணை திருமணம் முடித்துள்ளார். தற்போது இப் பெண்ணையும் கை விட்டுச் சென்றுள்ளார். இதனால் தானும் பிள்ளை யும் வாழ்வதற்கு மிகவும் சிரமப்படுவதாக முறைப் பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 05.02.2010 | 22 | கிரான்குளம் | வீடு | கணவர் | வெளிநாட்டில் இருந்து தனது அக்கா வந்ததும் தனது கணவர் அக்காவை கூட்டிச் சென்றுவிட்டார். இதனால் தானும் பிள்ளைகளும் துன்பப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவரைத் தேடிப் பிடித்து தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கூறுகிறார். |
| 08.02.2010 | 48 | கிரான் | நொத் தாரிசு அலுவ லகம் | வெளிநபர் | இப் பெண் தனது கஸ்ட நிலமையால் தனது நிலத்தை அடகு வைத்து கடனாக 5000 ரூபாவைப் பெற்றுள்ளார். எனினும் கடன் வழங்கியவர்கள் தனது நிலத்திற்கு அவர்கள் பெயரில் உறுதி முடித்துள்ளார்கள். இதனால் தன் நிலத்தை தான் மீட்க முடியாமல் இருப்பதாக முறைப்பாடு செய்யும் பெண் நிலத்தை மீட்டுத்தரும்படி கோருகிறார். |
| 12.02.2010 | 48 | கல்லடி | தெரு | வெளிநபர் | தங்களுடன் வசித்து வந்த உறவினர் தன்னுடன் சண்டைபிடித்து தன்னைத் தெருவிற்கு இழுத்து வந்து அனைவர் முன்னும் தன் சட்டையை முழுதாக கிழித்து மானபங்கப்படுத்தியதாக முறைப்பாடு செய்யும் பெண், உரியவருக்கு தகுந்த தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும்படி கோருகிறார். |
| 15.02.2010 | 16 | ஓந்தாச்சி மடம் | வீடு | சகோதரி | வீட்டில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சிறுமி வீட்டில் இருந்து வெளியேறி வந்துவிட்டார். குடும் பத்தாருடன் இப் பிரச்சனை விடயமாக கதைக் கப்பட்டது. |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 15.02.2010 | 23 | மஞ்சந் தொடுவாய் | வீடு | காதலன் | தான் திருமணம் செய்து கொள்ளப் போகும் தன் காதலன் தற்போது தனது உறவுமுறையான பெண்ணுடன் கதைத்து வருவதால் தனக்கு மிக மன வேதனையாக உள்ளதாக கூறும் பெண் இது விடயமாக காதலனுடன் கதைத்து தனது துயரைத் தீர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 16.02.2010 | | செங்கலடி | நகைக் கடை | முதலாளி | கடை ஒன்றில் பணியாளராக இப் பெண் வேலை செய்து கொண்டுள்ளார். தனது திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கையில் தான் வேலை செய்த கடையில் இருந்து லட்சக்கணக்கில் பணம் களவாடியுள்ளதாக கடை முதலாளி தன்னை அச்சுறுத்தி வருவதுடன் பொலிசில் அறிவிக்கப் போவதாக மிரட்டி வருவதாகவும் இப் பெண் முறைப்பாடு செய்கிறார். |
| 16.02.2010 | 25 | வாகரை | வீடு | காதலன் | "திருமணம் முடிப்பேன்" என வாக்குறுதி வழங்கி வீட்டிற்கு வந்து பழகிய காதலனால் தான் கர்ப்பம் தரித்ததாகவும் எனினும் கர்ப்பம் தரித்த பின் காதலன் தனது தங்கையை அழைத்துச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண் பிறக்கப்போகும் குழந்தைக்கு பிறப்புப் பதிவு வைக்கவும் தனக்கு நியாயம் பெற்றுக்கொள்ளவும் உதவிபுரியும்படி கோருகிறார். |
| 17.02.2010 | 46 | இருதயபுரம் | வீடு | கணவன் | குடிப்பழக்கம் உள்ள தனது கணவன் தன்மேல் சந்தேகப்பட்டு சண்டை பிடித்து அடித்து வருவதால் பிள்ளைகளின் படிப்பு பாழாக்கப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 17.02.2010 | 32 | கருவப்பங் கேணி | வீடு | தந்தை | தனது பெயரில் காணி இருந்தும் தந்தை காணியை தனக்கு வழங்க மறுப்பதால் தானும் கணவனும் வாடகை வீட்டில் வாழ்ந்து வரவேண்டியுள்ளது. இதனால் கணவன் தன்னுடன் சண்டை பிடித்து வருகிறார் என முறைப்பாடு செய்யும் பெண் காணியை தந்தையிடமிருந்து பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 17.02.2012 | 30 | செங்கலடி | வீடு | கணவர் | அடையாள அட்டையும் இல்லாமல் இருந்த தன் கணவனுக்கு அடையாள அட்டையில் இருந்து சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுத்தும் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து அவரது தாயுடன் போய்ச் சேர்ந்து விட்டதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனைத் தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 2010 | 26 | புன்னைச் சோலை | வீடு | கணவர் | தனக்கும் தன் மனைவிக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தின் பின் மனைவி தன்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டதாக கூறும் கணவன், தன் மனைவியை தேடிப் பிடித்து தன்னுடன் சேர்த்துவைக்கும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 19.02.2010 | 26 | மூதூர் | வீடு | காதலன் | காதலனால் தான் கர்ப்பமாக்கப்பட்டதாகவும் எனினும் பிள்ளை பிறந்ததும் தன்னைக் கைவிட்டு வெளிநாட்டிற்கு சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், குழந்தைக்கு பிறப்பு பதிவு வைப்பதற்கு உதவி புரியும்படி கோருகிறார். |
| 25.02.2010 | 26 | சின்ன ஊறணி | விடு | கணவர் | குடிப்பழக்கமுடைய தன் கணவன் குடித்துவிட்டு தினமும் தன்னுடனும் பிள்ளைகளுடனும் சண்டை பிடித்து வீட்டைவிட்டு துரத்துவதால் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத்தரும்படி பெண் கோருகிறார். |
| 2010 | | முறக் கொட்டாஞ் சேனை | வீடு | மருமகன் | மகளின் கணவன் மகளை கைவிட்டுச் சென்றபின் ஆறு பேரப்பிள்ளைகளையும் மகளையும் வீட்டு வேலைகள் செய்து இப் பெண் பராமரித்து வருகிறார். எனினும் இன்னும் தன்னால் 9ம் வகுப்பில் படிக்கும் தனது பேத்தியை தொடர்ந்து படிப்பிக்க வசதி இல்லாமல் இருப்பதால் பேத்தியை படிப்பிப்பதற்கு உதவி புரியும்படி பெண் கோருகிறார். |
| 01.03.2010 | 32 | சத்துருக் கொண்டான் | வீடு | கணவன் | இப் பெண்ணிற்கு 3 பிள்ளைகள் உள்ளனர். தனது கணவன் தினமும் குடித்துச் சண்டை போடுவதால் பிள்ளைகளை படிப்பிக்க முடியாதிருப்பதுடன் செலவிற்கு பணமும் தருவதில்லை என பெண் முறைப்பாடு செய்கிறார். ஆகவே கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 01.03.2010 | | மட்டக்களப்பு | வீடு | | பெண்ணின் கணவன் வெளிநாட்டில் வேலை செய்பவர். தனது மனைவி தனது பிள்ளைகளுக்குத் தான் அனுப்பும் பொருட்களை வழங்க விடாமல் தடுப்பதுடன் தொலைபேசியில் உரையாடவும் அனுமதிப்பதில்லை எனக் கூறும் கணவன் மனைவியிடம் இதற்கான காரணத்தைக் கேட்கும்படி கோருகிறார். |
| 08.03.2010 | 30 | மண்டூர் | வீடு | கணவன் | இப் பெண்ணிற்கு 3 பிள்ளைகள் உள்ளனர். தனது கணவன் தினமும் குடித்துச் சண்டை போடுவதால் பிள்ளைகளை படிப்பிக்க முடியாதிருப்பதுடன் செலவிற்கு பணமும் தருவதில்லை என முறைப்பாடு செய்கிறார். ஆகவே கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத்தரும்படி பெண் கோருகிறார். |



மட்டக்களப்பில் 22 கிராமங்களில் 2010 சேவ்த சில்ரன் மேற்கொண்ட ஆய்வில் 14-18 வயதிற்குட்பட்ட 30 பெண்களிடையே குறைந்தது 01 பிள்ளை மிக கடுமையான பாலியல் துஸ்பிரயோகத்தினை எதிர் கொண்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.

- நன்றி -

"மின்மினி" செய்திகள்

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 10.03.2010 | 35 | இருதயபுரம் | வீடு | கணவன் | தனது கணவன் வேலைக்கு ஒழுங்காகச் செல்வதுமில்லை வீட்டுச் செலவுகளை கவனிப்பதுமில்லை. எனினும் தான் வேலைக்குச் சென்றால் தன்மேல் சந்தேகப்பட்டு சண்டைபிடித்து வீட்டு வேலைக்குச் செல்லவிடாமல் தடுக்கிறார். ஆகவே பிள்ளையை பராமரிப்பது, வாழ்க்கைச் செலவை கொண்டு நடத்துவது மிகவும் கஸ்டமாக உள்ளது என முறைப்பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 10.03.2010 | 27 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | தனது கணவன் தன்னுடன் சண்டை பிடித்து அவரது பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், பிள்ளைக்கு பால்மா வாங்கவும் கஸ்டமாய் உள்ளது. ஆகவே கணவனைத் தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 2010 | 35 | மாமாங்கம் | வீடு | கணவன் | கணவன் மூன்று தடைவை வெளிநாட்டுக்கு வேலைபார்ப்பதாகச் சென்று இடையில் திரும்பி வந்துள்ளார். இதனால் கடன் அதிகமாக உள்ளது. எனினும் கடன் சம்பந்தமாகக் கணவன் எந்தவிதப் பொறுப்பும் இல்லாமல் தன்னுடன் சண்டை பிடிக்கிறார். இதனால் தன்னைவிட்டுப் பிரிந்துவாழும் கணவன் தன்னை கொலை செய்யத் தேடுவதாக பெண் முறைப்பாடு செய்கிறாார். |
| 12.03.2010 | 50 | கல்லடி | வீடு | கணவன் | கணவன் தினமும் குடித்துவிட்டுச் சண்டைபிடிப்பதால் இரவில் பிள்ளைகளைப் படிப்பிக்கமுடியாமல் உள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 12.03.2010 | 27 | புதுக் குடியிருப்பு | வீடு | கணவன் | இப் பெண்ணின் கணவன் வெளிநாடு சென்று திரும்பியுள்ளார். வெளிநாடு சென்று திரும்பியதில் இருந்து தான் கர்ப்பம் தரித்துள்ளதாகக் கூறி தன்னுடன் சன்டை பிடித்து வீட்டுச் சாமான்களை உடைப்பதாக முறைப்பாடு செய்யும் பெண் தற்போது தன்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட்ட கணவனிடமிருந்து தனக்கும் இரு பிள்ளைகளுக்கும் தாவரிப்புப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 15.03.2010 | | மட்டக்களப்பு | வீடு | கணவன் | சந்தேகப்பட்டு அடிப்பது, பாசாங்காக நடிப்பது, அகங்காரமாய், சுயநலவாதியாய் இருப்பது, ஆபாசப் படங்களைப் பார்க்க தன்னை நிர்ப்பந்திப்பது, அவ்வாறே நடக்கும்படி அடிப்பது எனப் பல கொடுமைகளைச் செய்து வந்துள்ள கணவன் தற்போது பிள்ளையையும் அபகரித்துச் சென்றுவிட்டாதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து பிள்ளையைப் பெற்றுத் தருவதுடன் விவாகரத்தும் பெற்றுத் தரும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 15.03.2010 | 24 | புது முகத்துவாரம் | வீடு | வெளிநபர் | வீதிபோடும் வேலைக்கு வந்தவருடன் ஏற்பட்ட பழக்கத்தில் பெண்ணுக்கு குழந்தை பிறந்துள்ளது. வீதிவேலை முடிந்ததும் குற்றம் சாட்டப்பட்ட நபர் பிள்ளையையும் பெண்ணையும் கைவிட்டுச் சென்றுவிட்டார். தனது பிள்ளைக்கு பிறப்புப் பதிவு வைப்பதற்குரிய ஏற்பாடுளைச் செய்து தரும்படி பெண் கோருகிறார். |
| 16.03.2010 | 39 | நாவற்குடா | வீடு | கணவன் | தனது கணவன் குடித்துவிட்டுத் தினமும் சண்டை பிடித்து வருவதுடன் பல முறை நான்கு பிள்ளை களையும் தன்னையும் வீட்டிற்கு வெளியே துரத்தி வீட்டைப் பூட்டித் திறப்பை எடுத்துச் சென்று விடுவ தால் தானும் பிள்ளைகளும் வீதியில் நிற்க வேண்டியுள்ளது என முறைப்பாடு செய்யும் பெண், வீட்டை 17 வயதுள்ள மூத்த மகளின் பெயருக்கு மாற்றி எழுத உதவி புரியும்படி கேட்பதுடன் கணவ னிடமிருந்து தாவரிப்பும் கோருகிறார். |
| 16.03.2010 | 34 | மயிலம்பா வெளி | வீடு | கணவன் | தனது கணவன் ஏற்கனவே திருமணம் புரிந்து 2 பிள்ளைகள் உள்ளவர். இதை மறைத்து தன்னைத் திருமணம் செய்து 5 பிள்ளைகள் உள்ள நிலையில் தன்னை கைவிட்டுச் சென்று விட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து தனக்கும் பிள்ளைகளுக்கும் தாவரிப்புக் கோருகிறார். |
| 23.03.2010 | 31 | கரவெட்டி | வீடு | வெளிநபர் | திருமணம் செய்வதாகக் கூறி தன்னுடன் பாலியல் உறவுகொண்டு பழகிவந்தவர் தான் கர்ப்பினியா னதும் தன்னைக் கைவிட்டுச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண் பிள்ளைக்குப் பதிவு வைக்க உதவும்படி கோருகிறார். |
| 23.03.2010 | 24 | தன்னாமுனை | வீடு | கணவன் | கணவன் தினமும் குடித்துவிட்டுச் சண்டை பிடிப்ப தால் பிள்ளைகளைப் படிப்பிக்கவும் பராமரிக்கவும் கஸ்டமாக உள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 25.03.2010 | 18 | இருதயபுரம் | வீடு | அயல்வீட்டார் | அயல் வீட்டார் தினமும் தங்களுக்கு அவதூறாக ஏசி வருவதால் மனம் மிகவும் பாதித்துள்ளதாக முறைப் பாடு செய்யும் பெண், அயல் வீட்டாருடன் கதைத்து பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 30.03.2010 | 30 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | கணவன் தன்னுடன் சண்டை பிடித்துப் பிரிந்து சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனை அழைத்து கதைத்து பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 25.03.2010 | 55 | மண்டூர் | வீடு | கணவன் | சீதனமாய்த் தந்த வீட்டை விற்றுப் புது வீடுகட்டப் பணம் தரும்படி சண்டைபிடிக்கத் தொடங்கிய கணவர், வீட்டைவிற்றுப் பணம் கொடுத்தும் இன்னும் மோசமாகத் தன்னுடனும் மகளுடனும் சண்டை பிடித்து வருவதாக முறைப்பாடு செய்யும் பெண், உணவில் துப்புதல், படுக்கையில் நீர் ஊற்றுதல், சாப்பாட்டை முகத்தில் எறிதல், சாப்பாட்டில் மண் கொட்டல் போன்ற நடவடிக்கையில் கணவன் ஈடுபட்டு வருவதுடன் தன்னையும் மகளையும் பெற்றோல் ஊற்றி எரித்தோ அல்லது நஞ்சு வைத்தோ கொலை செய்யப் போவதாக அச்சுறுத்துவதால் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற உதவி புரியும்படி கோருகிறார். |
| 05.04.2010 | 24 | கிரான்குளம் | வீடு | கணவன் | தனக்கும் இரு பிள்ளைகளுக்கும் கணவன் கட்டி வரும் தாவரிப்புத் தொகை ரூபாய் 3500 தற் போதைய வாழ்க்கைச் செலவிற்குப் போதாமல் உள்ளதால் பெண், கணவரிடமிருந்து தங்கள் வாழ்க்கைச் செலவுக்கு தகுந்த தொகையைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 05.04.2010 | 36 | முறக் கொட்டாஞ் சேனை | வீடு | கணவன் | தன்னையும் பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்ற கணவன் தாவரிப்புக்குச் செலுத்தி வரும் பணம் வாழ்க்கைச் செலவிற்குப் போதாமல் உள்ளதால் பெண், கணவரிடமிருந்து தங்கள் வாழ்க்கைச் செலவுக்கு தகுந்த தொகையைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 05.04.2010 | 49 | ஆயித்தியமலை | வீடு | கணவன் | தன்னைத் திருமணம் செய்த 9ம் நாளில் இருந்து கணவன் மிகவும் மோசமாக அடித்துக் காயப் படுத்துவதாக முறைப்பாடு செய்யும் பெண் தனக் கும் மகளுக்கும் கணவனிடமிருந்து பாதுகாப்புத் தேவை எனக் கோருகிறார். |
| 12.04.2010 | 26 | சின்ன ஊறணி | கல்வி நிறுவ னம் | சக ஊழியர் | இப் பெண் சார்பாக இப் பெண்ணின் தந்தை முறைப்பாடு செய்கையில், பெண் தொழில் நிமித்தம் வேறு மாவட்டத்தில் கல்வி சார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிகிறார். அவருடன் வேலை செய்யும் உத்தியோகத்தர் பெண்ணை திருமணம் முடிப்பதாக ஏமாற்றி வேறு வீட்டில் தங்கவைத்து பெண்ணின் நகைகளை, பணத்தை அபகரித்துக் கொண்டிருப்பதுடன் பெண்ணைப் பல வழிகளிலும் துன்புறுத்தி வருகிறார்". இவ்வாறு முறைப்பாடு செய்யும் தந்தை மகளை மீட்டுத் தரும்படி கோருகிறார். |
| 15.04.2010 | 38 | சின்ன ஊறணி | வீடு | கணவன் | பிள்ளைகளும் மனைவியும் தான் விரும்பியதை உண்ணவேண்டும் தான் விரும்பியதையே பிள்ளை கள் படிக்கவேண்டும் எனக் கணவர் வற்புறுத்தி துன்பப்படுத்துவதாக பெண் முறைப்பாடு செய்கிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 19.04.2010 | 30 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | வெளிநாடு சென்று வந்த கணவன் தினமும் குடித்துவிட்டு அடித்துத் துன்பப்படுத்தி வருகிறார் பொலிசாரிடம் அறிவித்தபோது அவர்கள் சேர்த்து வைத்தார்கள். எனினும் இன்னும் குடியை நிறுத்தாமல் அடித்துத் துன்பப்படுத்தி வருகிறார் என முறைப்பாடு செய்யும் பெண் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 19.04.2010 | 42 | கருவப்பங் கேணி | வீடு | கணவன் | தினமும் குடித்துவிட்டுச் சண்டை பிடித்து வந்த கணவன் கடந்த 6 மாத காலமாக வீட்டைவிட்டு வெளியேறி விட்டார் என முறைப்பாடு செய்யும் பெண், கணவனுடன் கதைத்து சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 19.04.2010 | 28 | சின்னஊறணி | வீடு | அயலவர் | சீட்டுப் பிரச்சனை காரணமாக அயல்வீட்டு நபர்கள் பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்து பெண்ணை அடித்துள்ளார்கள். |
| 20.04.2010 | 40 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | திருமணத்தின் பின் ஒருமாதம் வரை தான் கணவனுடன் கணவனது பெற்றோர் வீட்டில் வாழ்ந்ததாகவும் தற்போது தன்னை வேண்டாம் என்று கணவன் வீட்டை விட்டு அனுப்பிவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், தனது சீதனச் சாமான்கள் அனைத்தையும் கணவனிடமிருந்து மீளப் பெற்றுக் கொள்ள உதவி புரியுமாறு கோருகிறார். |
| 20.04.2010 | 27 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | பெண்ணின் கணவன் 3 வருடங்களாக பெண்ணைப் பிரிந்து வேறு மாவட்டத்தில் பல இடங்களில் வாழ்ந்து வருகிறார். தானும் இரு பிள்ளைகளும் வாழ்வதற்கு மிகவும் கஸ்ரப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவனைக் கண்டு பிடித்து கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 21.04.2010 | 21 | தன்னாமுனை | வீடு | கணவன் | தனது கணவன் தொழிலுக்குச் செல்லும் இடங்களில் எல்லாம் பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்யும் பழக்கம் உடையவர். தன்னையும் ஏமாற்றி நான்காவது தடவையாக திருமணம் முடித்துள்ளார். தற்போது கரடியனாறுக்கு வேலைக்குச் சென்ற கணவன் அங்கும் ஒரு திருமணம் முடிக்கப் போகிறார் எனப் பெண் முறைப்பாடு செய்கிறார். பெண் முறைப்பாடு செய்ததை அறிந்த கணவன் தற்போது பெண்ணுடன் வந்து சேர்ந்துள்ளார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 21.04.2010 | 30 | வந்தாறு மூலை | வீடு | கணவன் | பெண்ணுடைய பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்ட கணவன் தற்போது அம்மாவட்டத்தின் முகாமில் வாழும் பெண்ணைத் திருமணம் செய்யப்போவதாக இப் பெண் அறிந்துள்ளார். ஆகவே கணவனைக் கண்டு பிடித்து கணவனிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத்தரும்படி பெண் கோருகிறார். |
| 27.04.2010 | 26 | மன்னார் | வீடு | காதலன் | தனது காதலை அறிந்த காதலனின் அம்மா விஷம் குடித்ததாகவும் ஆகவே அவர்கள் குடும்ப நன்மைக் காக தனது காதலை தான் விட்டுக் கொடுக்கப் போவதாக தெரிவிக்கும் பெண், காதலன் குடும்பத் தார் தன்மீது நம்பிக்கையற்றிருப்பதால் தனது எண்ணத்தைக் காதலன் வீட்டாரிடம் புரியவைத்து காதலனிடம் உள்ள தனது புகைப்படத்தைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 27.04.2010 | 29 | நொச்சுமுனை | வீடு | கணவன் | தன்னைவிட்டுப் பிரிந்து சென்றுள்ள கணவன் தனக்கெதிராக விவாகரத்து வழக்குப் போட்டுள்ள தால் இவ் வழக்கைத் தொடர்ந்து நடத்த தனக்கு உதவும்படி பெண் கோருகிறார். |
| 27.04.2010 | | மட்டக்களப்பு | வீடு | சித்தப்பா | தனது பெயரில் இருந்த கடையை இதுவரை சித்தப்பா பராமரித்து வந்ததாகவும் தற்போதுதான் திருமணம் முடித்துவிட்ட நிலையில் கடையைத் தர சித்தப்பா மறுப்பதாகத் தெரிவிக்கும் பெண் கடையைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 29.04.2010 | 18 | மட்டக்களப்பு | வீடு | காதலன் | தனது வீட்டில் தங்கியிருந்த காதலன் மூலம் தான் கருவுற்றதாகவும் இதையறிந்த காதலனது பெற்றோர் காதலனைப் பிரித்துச் சென்றுவிட்ட தாகவும் முறைப்பாடு செய்யும் பெண், தனது பிள்ளைக்குப் பிறப்புப் பதிவுவைக்கவும் தன்னுடன் காதலனைச் சேர்த்து வைக்கும்படியும் கோருகிறார். |
| 30.04.2010 | 42 | நொச்சுமுனை | வீடு | கணவன் | இப் பெண்ணுடன் கணவன் பிரச்சனைப்பட்டிருந்த தனால் பெண் வழக்குத் தொடர்ந்து சிறிது காலம் கணவனைப் பிரிந்து வாழ்ந்துள்ளார். எனினும் கணவன் மீண்டும் சேர்ந்துள்ளார். தற்போது மீண்டும் பிரச்சனை கொடுக்கத் தொடங்கியுள்ளதால் விவாகரத்து வழக்குத் தொடர உதவும்படி பெண் கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்


| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 27.04.2010 | 29 | நொச்சுமுனை | வீடு | கணவன் | தன்னைவிட்டுப் பிரிந்து சென்றுள்ள கணவன் தனக்கெதிராக விவாகரத்து வழக்குப் போட்டுள்ளதால் இவ்வழக்கைத் தொடர்ந்து நடத்த தனக்கு உதவும்படி பெண் கோருகிறார். (குழந்தையை தொடர்ந்தும் தன்னுடன் வைத்துக்கொள்ள கணவன் விண்ணப்பித்துள்ளார்) |
| 27.04.2010 | | மட்டக்களப்பு | வீடு | சித்தப்பா | தனது பெயரில் இருந்த கடையை இதுவரை சித்தப்பா பராமரித்து வந்ததாகவும் தற்போது தான் திருமணம் முடித்துவிட்ட நிலையில் கடையைத் தர சித்தப்பா மறுப்பதாகத் தெரிவிக்கும் பெண் கடையைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 29.04.2010 | 18 | மட்டக்களப்பு | வீடு | காதலன் | தனது வீட்டில் தங்கியிருந்த காதலன் மூலம் தான் கருவுற்றதாகவும் இதையறிந்த காதலனது பெற்றோர் காதலனைப் பிரித்துச் சென்றுவிட்டதாகவும் முறைப்பாடு செய்யும் பெண், தனது பிள்ளைக்குப் பிறப்புப் பதிவுவைக்கவும் தன்னுடன் காதலனைச் சேர்த்து வைக்கும்படியும் கோருகிறார். |
| 30.04.2010 | 42 | நொச்சுமுனை | வீடு | கணவன் | இப் பெண்ணுடன் கணவன் பிரச்சனைப்பட்டிருந்ததனால் பெண் வழக்குத் தொடர்ந்து சிறிது காலம் கணவனைப் பிரிந்து வாழ்ந்துள்ளார். எனினும் கணவன் மீண்டும் சேர்ந்துள்ளார். தற்போது மீண்டும் பிரச்சனை கொடுக்கத் தொடங்கி யுள்ளதால் விவாகரத்து வழக்குத் தொடர உதவும்படி பெண் கோருகிறார். |
| 05.05.2010 | 17 | மட்டக்களப்பு | வீடு | தாய் | தாயின் நடவடிக்கை பிடிக்காத காரணத்தால் தாயைப் பிரிந்து வந்துவிட்டதாக முறைப்பாடு செய்யும் சிறுமி, தான் கல்வி கற்க வேறு இடம் ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 05.05.2010 | 20 | வாழைச் சேனை | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டவர் ஏற்கனவே இரு பெண்களை ஏமாற்றித் திருமணம் முடித்துள்ளார். தற்போது இப் பெண்ணையும் ஏமாற்றித் திருமணம் முடித்துள்ளார். இதனால் வீட்டை விட்டு பெண் வெளியேறியுள்ளதுடன் குற்றம் சாட்டப்பட்டவரை விவாகரத்துச் செய்ய ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 05.05.2010 | 22 | கொம்மா துறை | வீடு | கணவர் | திருமணம் முடித்து 3 மாதத்தின் பின் தன்னைப் பிரிந்து சென்ற கணவன் மீண்டும் திரும்பி வரவில்லை என முறைப்பாடு செய்யும் பெண், கணவனை விவாகரத்துச் செய்ய விரும்புவதாகத் தெரிவிக்கின்றார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 05.05.2010 | 55 | | அலுவலகம் | வெளிநபர் | அலுவலகத்தில் தனது சொற்படி நடப்பதுடன் தன்னுடன் மட்டும் கதைக்கவேண்டும் என எதிர் பார்க்கும் மேலதிகாரி தன்னை அவமானமாக நடத்துவதுடன் தனது முன்னேற்றத்தை தடுத்தும் வருகிறார் என முறைப்பாடு செய்யும் பெண், தனக்கு நியாயம் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 07.05.2010 | 42 | ஏறாவூர் | வீடு | கணவர் | கணவர் தனது உழைப்பில் தான் மட்டும் வாழ்வதற்காத் தங்களைப் பிரிந்து சென்றுவிட்டார். ஆகவே எந்தவித வருமானமுமின்றி தற்போது பிச்சை எடுப்பதாகக் கூறும் பெண், பிள்ளைகளைப் படிப்பிக்கவும் முடியாமல் இருப்பதால் கணவரிடமிருந்து தாவரிப்பைப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 10.05.2010 | 36 | அக்கரைப் பற்று | வீடு | கணவர் | கணவர் தினமும் பிரச்சனைப்படுத்துவதாலும், விவாகரத்துப் போடும்படி வற்புறுத்துவதாலும், வேறு பெண்களுடன் பழக்கமுள்ளவர் என சமூகம் கூறுவதாலும் தனது மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண் தன்னால் விவாகரத்து வழக்குப் போடமுடியாது எனத் தெரிவிக்கின்றார். |
| 10.05.2010 | 38 | பெரிய கல்லாறு | வீடு | கணவர் | இப் பெண் தனது பெயரில் இருந்த காணியை வீட்டுக்கடன் எடுப்பதற்காக கணவன் பெயருக்கு மாற்றியுள்ளார். தற்போது கணவன் பெண்ணைப் பிரிந்து சென்றுவிட்டார். எனினும் தன் கணவன் அக் காணிக்கு மீண்டும் 10 இலட்சம் எடுக்க முயற்சித்தபோது தான் வங்கி முகாமையாளரைச் சந்தித்து அதைத் தடுத்துவிட்டதாக தெரிவிக்கும் பெண் காணியை தனது பெயருக்கு மாற்றி எழுத உதவும்படி கோருகின்றார். |
| 09.05.2010 | 26 | வவுனியா | வீடு | காதலன் | இந்தியாவைச் சேர்ந்த இப் பெண் மத்திய கிழக்கு நாடொன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாக கடமையாற்றியபோது இலங்கையைச் சேர்ந்த ஆணிண் தொடர்பு இவருக்குக் கிடைத்துள்ளது. இதனால் தான் வேலை செய்த வீட்டை விட்டு வெளியேறி குறிப்பிட்ட ஆணுடன் வேறொரு இடத்தில் தங்கியிருந்துள்ளார். பின்னர் திருமணம் செய்வதாகக் கூறி குறிப்பிட்ட ஆண் இலங்கைக்கு தன்னை அழைத்து வந்ததாகத் தெரிவிக்கும் பெண், தற்போது ஆணின் வீட்டார் தன்னை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டதாக முறைப்பாடு செய்கிறார். ஆகவே தனக்கு திருமணப் பதிவு வைக்க உதவும்படி கோருகிறார். |
| 13.05.2010 | 30 | வாழைச் சேனை | வீடு | கணவர் | கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள தனது கணவர் மறியலில் உள்ளதாக குறிப்பிடும் பெண், அவருக்காக வழக்குப் பேசவோ கணவரை பிணையில் எடுக்கவோ தனக்கு வசதியில்லாமல் இருப்பதால் கணவரை பிணையில் எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 17.05.2010 | 18 | மட்டக்களப்பு | வீடு | கணவர் | இருவரும் வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள். விரும்பித் திருமணம் முடித்துள்ளனர். குழந்தை பிறந்ததும் கணவனுக்கு தன் மதத்திலும் பெண்ணுக்கு தன் மதத்திலும் பிள்ளைக்கான பிறப்புப் பதிவை வைக்க விரும்புகின்றனர். இதனால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு கணவர் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். கணவனை அழைத்து பிள்ளைக்கு பதிவு வைக்க உதவி புரியும்படி பெண் கோருகிறார். |
| 18.05.2010 | 34 | காத்தான்குடி | வீடு | அயலவர் | அயல் வீட்டார் தகாத வார்த்தைகள் பேசி தன்னைத் துன்பப்படுத்துவதாக முறைப்பாடு செய்யும் பெண், இதனை நிறுத்துவதற்கு உதவுமாறு கோருகிறார். |
| 19.05.2010 | 30 | மண்டூர் | வீடு | கணவர் | குற்றம் சாட்டப்பட்டுள்ள கணவன் இப் பெண்ணையும் பிள்ளைகள் இருவரையும் 9 வருடங்களாக பிரிந்து சென்றுவிட்டார். இதனால் பிள்ளைகளை வளர்க்க மிகவும் சிரமப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவரிடமிருந்து தாவரிப்புப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 20.05.2010 | 35 | நாவற்குடா | வீடு | காதலன் | குற்றம் சாட்டப்பட்டவர் இப் பெண்ணுடன் பாலியல் தொடர்பு கொண்டதன் மூலம் இப் பெண், 1994ம் ஆண்டு குழந்தை பெற்றுள்ளார். அதனைத் தொடர்ந்து பெண், குற்றம் சாட்டப்பட்டவரது பெயரை வைத்து குழந்தைக்குப் பிறப்புப் பதிவு வைத்துள்ளார். எனினும் குழந்தை தனது இல்லை என காதலன் மறுத்ததால் பிறப்புப் பதிவு ரத்துச் செய்யப்பட்டது. பொலிசில் இது சம்பந்தமாக பெண் முறைப்பாடு செய்தபோது குறிப்பிட்ட நபர் வெளிநாட்டிற்குச் சென்று விட்டார். தற்போது இப் பிள்ளை வளர்ந்து விட்டதால் அடையாள அட்டை எடுக்கப் பிறப்புப் பதிவு தேவையாக உள்ளது எனக் குறிப்பிடும் பெண், தனது பிள்ளை அடையா அட்டை பெற்றுக் கொள்ள உதவி புரியும்படி கோருகிறார். |





# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 21.05.2010 | 66 | விளா வெட்டுவான் | வீடு | கணவர் | இப் பெண் கர்ப்பினியாக இருக்கும்போது கணவன் பெண்ணைக் கைவிட்டு வேறு திருமணம் முடித்துள்ளார். இதனால் பெண் வழக்குத் தாக்கல் செய்தபோது நீதிமன்றத்தால் பெண்ணுக்கும் குழந்தைக்கும் மாதா மாதம் 400 ரூபாய் கட்டும்படி குற்றம் சாட்டப்பட்டவருக்கு கட்டளையிடப் பட்டது. இத் தாவரிப்புத் தொகை போதாத காரணத்தால் பெண் வெளிநாட்டிற்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார். தற்போது 12 வருடங்கள் கழிந்த நிலையில் உடல் நிலை பாதிக்கப்பட்ட காரணத்தால் பெண் நாடு திரும்பியுள்ளார். தனது கணவன் செலுத்தி வரும் 400 ரூபாய் தனக்கும் பிள்ளைக்கும் போதாமல் இருப்பதால் தாவரிப்புத் தொகையை அதிகரித்துப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்து தரும்படி பெண் கோருகிறார். |
| 24.05.2010 | 48 | மட்டக்களப்பு | வீடு | காதலன் | குற்றம் சாட்டப்பட்டவர் பெண்ணைத் திருமணம் செய்வதாக ஏமாற்றி பெண்ணுடன் பாலியல் உறவு கொண்டுள்ளார். இதனால் குழந்தை ஒன்றை இப் பெண் பெற்றதும் குற்றம் சாட்டப்பட்டவர் பெண்ணிற்குத் திருமணப் பதிவு வைக்காமல் பெண்ணிடம் இருந்து காணி ஒன்றைப் பெற்று குழந்தைக்கு மட்டும் பிறப்புப் பதிவு வைத்துள்ளார். ஆகவே தான் குறிப்பிட்ட நபரிடமிருந்து தாவரிப்பும் நஸ்டஈடும் பெற்றுக்கொள்ள உதவி புரியும்படி பெண் கோருகிறார். |
|  | 28 | களுவாஞ்சிக் குடி | வீடு | கணவன் | கணவன் செலுத்தி வரும் தாவரிப்புத் தொகை போதாமல் உள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண், தாவரிப்புத் தொகையை அதிகரித்துப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 26.05.2010 | 25 | நாவற்காடு | வீடு | கணவன் | அடிக்கடி கணவன் பிரச்சனைப்பட்டு தங்களைப் பிரிந்து செல்வதால் பிள்ளைகளை வளர்க்க மிகவும் சிரமப்படுவதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவரிடமிருந்து தாவரிப்புப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்துதரும்படி கோருகிறார். |
| 31.05.2010 | 27 | சத்துருக் கொண்டான் | வீடு | கணவன் | திருமணம் முடித்த நாளில் இருந்து வீட்டிற்கு ஒழுங்காக வராது இருப்பதுடன் வீட்டுப் பொறுப்புக்களையும் கணவன் கவனிப்பதில்லை என முறைப்பாடு செய்யும் பெண் கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக்கொள்ள உதவி புரியும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 01.06.2010 | 27 | களுதாவளை | வீடு | கணவன் | திருமணத்தின் முன் இப் பெண்ணினது கணவன் பெண்ணை கர்ப்பவதியாக்கியுள்ளார். இந் நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் பிள்ளையைப் பெற்றுத் தத்துக் கொடுக்கும்படி பெண்ணை வேறு ஊருக்கு அழைத்துச் சென்று அங்குள்ள காப்பகத்தில் இப் பெண் "அநாதை" எனக் கூறி ஒப்படைத்துள்ளார். பிள்ளை பிறந்ததும் குழந்தையைத் தத்துக் கொடுக்க பெண் மறுத்துள்ளார். பின்னர் திருமணப் பதிவு வைத்த கணவன் இன்றுவரை தினமும் பிரச்சனைப்படுத்துவதால் கணவனிடமிருந்து தானும் பிள்ளையும் பிரிந்து வாழ ஏற்பாடு செய்து தரும்படி பெண் கோருகிறார். |
| 04.06.2010 | 32 | திராய்மடு | வீடு | கணவன் | கணவன் வீட்டுக்கு ஒழுங்காக வராமல் இருப்பதுடன் வீட்டுச் செலவிற்குப் பணமும் தருவதில்லை. எனவே பிள்ளைகளை வளர்ப்பது மிகவும் சிரமமாக உள்ளது என முறைப்பாடு செய்யும் பெண் தனக்கும் மூன்று பிள்ளைகளுக்குமான தாவரிப்பைக் கணவனிடமிருந்து பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 04.06.2010 | 28 | இருதயபுரம் | வீடு | கணவன் | தனது கணவன் தன்னையும் பிள்ளைகளையும் கைவிட்டு 19 வயதுப் பிள்ளையை திருமணம் முடித்து அழைத்துச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், தன்னால் பிள்ளைகளைப் பராமரிப்பது மிகவும் கஸ்டமாக இருப்பதால் கணவரை தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 26.05.2010 | 28 | களுவாஞ்சிக் குடி | வீடு | கணவன் | கணவன் செலுத்தி வரும் தாவரிப்புத் தொகை போதாமல் உள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவரிடமிருந்து தங்கள் வாழ்க்கைச் செலவுக்கு தகுந்த தொகையைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 26.05.2010 | 25 | நாவற்காடு | வீடு | கணவன் | அடிக்கடி கணவன் பிரச்சனைப்பட்டு தங்களைப் பிரிந்து செல்வதால் பிள்ளைகளை வளர்க்க மிகவும் சிரமப் படுவதாக முறைப்பாடு செய்யும் பெண் கணவரிடமிருந்து தாவரிப்புப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்து தரும்படி கோருகிறார். |
| 31.05.2010 | 27 | சத்துருக் கொண்டான் | வீடு | கணவன் | திருமணம் முடித்த நாளில் இருந்து வீட்டிற்கு ஒழங்காக வராது இருப்பதுடன் வீட்டுப் பொறுப்புக்களையும் கணவன் கவனிப்பதில்லை என முறைப்பாடு செய்யும் பெண் கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக் கொள்ள உதவி புரியும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 2010 | | | | | சீதனம் கேட்டு பெண்ணிற்கு அடித்து வீட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டிற்குச் சென்றவர் நாடு திரும்பியும் தங்களிடம் வரவில்லை என முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து தனக்கும் இரு பிள்ளைகளுக்கும் உதவிகள் பெற்றுத்தரும்படி கோருகிறார். |
| 04.06.2010 | 28 | இருதயபுரம் | வீடு | கணவன் | தனது கணவன் தன்னையும் பிள்ளைகளையும் கைவிட்டு 19 வயதுப் பிள்ளையை திருமணம் முடித்து அழைத்துச் சென்றுவிட்டதாக முறைப்பாடு செய்யும் பெண், தன்னால் பிள்ளைகளைப் பராம ரிப்பது மிகவும் கஸ்டமாக இருப்பதால் கணவரை தன்னுடன் சேர்த்து வைக்கும்படி கோருகிறார். |
| 07.06.2010 | 36 | தன்னாமுனை | வீடு | கணவன் | கணவன் தினமும் குடித்துவிட்டு தன்னையும் பிள்ளைகள் ஐவரையும் வீட்டை விட்டு அடித்துத் துரத்துவதால் எங்கு செல்வது எனத் தெரியாதுள் ளது என முறைப்பாடு செய்யும் பெண் பிள்ளைக ளுடன் வீட்டில் வாழ ஒழுங்கு செய்து தருமாறு கோருகிறார். |
| 07.06.2010 | 30 | தர்மபுரம் | வீடு | கணவன் | இப் பெண்ணிற்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். எனினும் திருமணப் பதிவு இன்றி 14 வருடங்கள் கணவனுடன் வாழ்ந்து வந்த இப் பெண் வெளிநாட் டிற்கு பணிப் பெண்ணாக சென்றுள்ளார். தற்போது இவர் நாடு திரும்பிய நிலையில் கணவர் வேறு பெண்ணைத் திருமணம் முடித்துள்ளதை அறிந் துள்ளார். ஆகவே தானும் பிள்ளைகளும் வாழ மிகுந்த சிரமப்படுவதால் தாவரிப்பைப் பெற்றுத் தரும்படி கோருகிறார். |
| 07.06.2010 | 48 | சேத்துக்குடா | வீடு | அயல்வீட்டார் | அயல் வீட்டு நபர் குடித்துவிட்டு தகாத வார்த்தை களால் ஏசுவதால் தாங்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண் அந் நபர் ஏசுவதை நிறுத்தி வைக்கும்படி கோருகிறார். |
| 07.06.2010 | 30 | ஏறாவூர் | வீடு | கணவன் | இப் பெண் கணவனை வெளிநாட்டிற்கு அனுப்பு வதற்காக தனது 5 பவுண் நகையுடன், பக்கத்து வீட்டில் கடனாக 40000 ரூபாயும் பெற்றுக் கொடுத் துள்ளார். வெளிநாடு செல்வதாகக் கூறிச்சென்ற கணவன் வேறு ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வேறு ஊரில் வசித்துள்ளார். கணவனி டமிருந்து தகவல் எதுவும் வராததால் கணவனை விசாரித்து அலைந்ததில் கணவன் வேறு திருமணம் முடித்துள்ளதை பெண் அறிந்துள்ளார். ஆகவே தனக்கும் பிள்ளைகளுக்கும் தாவரிப்புப் பெற்றுத் தரும்படி பெண் கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 10.06.2010 | 21 | கொக்கட்டிச் சோலை | வீடு | கணவன் | குற்றம் சாட்டப்பட்டவரும் இப் பெண்ணும் இரு வீட்டாருக்கும் தெரியாமல் திருமணப் பதிவு வைத்துள்ளனர். தற்போது இரு வீட்டாருக்கும் இவ் விடயம் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பெண் தெரிவிக்கையில், காதலிக்கையில் தன்னைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றவர் திருமணப் பதிவு வைத்த பின் பழகுவதையும் வீட்டிற்கு வருவதையும் குறைத்துக் கொண்டதாகவும் தன்னுடன் சேர்ந்து வாழ்வதாயின் சீதனமாகக் கட்டிக் கொடுத்த வீட்டை விற்று தனது ஊரில் கட்டித் தரவேண்டும் என வற்புறுத்துவதாகவும் பெண் முறைப்பாடு செய்கிறார். இதனால் கணவனுடன் கதைத்து தனது சீதன வீட்டில் தாங்கள் சேர்ந்து வாழ உதவி புரியும்படி கோருகிறார். |
| 16.06.2010 | 43 | மண்டூர் | வீடு | கணவன் | பெண்ணையும் பிள்ளையையும் கணவர் ஒன்றரை வருடமாகக் கைவிட்டுச் சென்றுள்ளார். கணவன் எங்கே உள்ளார் என பொலிசார் கண்டுபிடிக்காததால் கணவரிடமிருந்து பிள்ளைகளுக்கான செலவைப் பெற முடியவில்லை என முறைப்பாடு செய்யும் பெண் கணவரைக் கண்டுபிடிக்க உதவி புரியும்படி கோருகிறார். |
| 17.06.2010 | 45 | மட்டக்களப்பு | வீடு | கணவன் | கணவர் தன்னை அடிப்பது சந்தேகப்படுவதுடன் மனநோயாளிபோல் நடந்தும் கொள்கிறார். தொழிலுக்குச் செல்லாமல் வீட்டில் நித்திரை செய்வதையே விரும்புகிறார். மற்றும் தன்னை கடையில் நிற்கவிடாமல் வீட்டிற்கு துரத்தி விட்டு விற்பனைக்கென வைத்துள்ள கடையப்பங்களை சாப்பிட்டுவிட்டு உடனே கடையை மூடிவிட்டு வீட்டிற்கு வந்து விடுகிறார். பிள்ளைகள் பாடசாலை செல்வதையும் விரும்புவதில்லை என முறைப்பாடு செய்யும் பெண், இதனால் தன்னால் நிம்மதியாக வாழ முடியாமல் இருப்பதுடன் நான்கு பிள்ளைகளையும் ஒழுங்காக வளர்க்க முடியாமல் இருப்பதாகவும் கூறுகிறார். |
| 17.06.2010 | | கொழும்பு | வீடு | கணவன் | குற்றம் சாட்டப்பட்டவர் தான் கல்வி கற்கும்போது இப் பெண்ணிடமிருந்து 40 இலட்சம் பணத்தினைப் பெற்றுக் கொண்டு பெண்ணைத் திருமணம் முடித்துள்ளார். பின் பெண்ணை வெளிநாட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கிருந்து திரும்பிய இவர்கள் கணவனின் வீட்டில் வாழ்ந்துள்ளார்கள். தான் இரண்டு மாதக் கர்ப்பினியாக இருக்கும்போது கணவனின் வீட்டில் வைத்து சீதனம் தரும்படி தன்னைக் கொடுமைப்படுத்தியதால் கணவனைப் பிரிந்துள்ளதாக முறைப்பாடு செய்யும் பெண், தான் கணவனுக்கு வழங்கிய சீதனப் பணத்தினைப் பெற்றுத்தரும்படி கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 20.06.2010 | 57 | வேட்டுக்காடு | வீடு | மகளின் கணவன் | மகளின் கணவன் தன்னை வீட்டில் இருக்க விடாமல் குடித்துவிட்டுச் சண்டை பிடிப்பதால் தனது காணியில் தான் இருக்க ஏற்பாடு செய்து தரும்படி பெண் கோருகிறார். |
| 22.06.2010 | 24 | கிரான்குளம் | வீடு | வெளிநபர் | தொழில் நிமித்தம் காத்தான்குடி சென்ற கணவர் வீடு திரும்பவில்லை என முறைப்பாடு செய்யும் பெண் இரு பிள்ளைகளை வளர்ப்பதற்கு உதவி புரியும்படி கோருகிறார். |
| 28.06.2010 | 24 | தன்னாமுனை | வீடு | கணவன் | வீட்டில் பிள்ளைகளுடன் வாழ விடாமல் கணவன் தொடர்ச்சியாக துன்புறுத்தி வருவதால் பொலிஸ், இலவச சட்ட மன்றம் ஆகிய இடங்களில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் எவ்விதப் பயனும் இதுவரை ஏற்படவில்லை என முறைப்பாடு செய்யும் பெண், வீட்டில் பிள்ளைகளுடன் வாழவும் கணவனிடமிருந்து தாவரிப்புப் பெறவும் உதவி புரியும்படி கோருகிறார். |
| 28.06.2010 | 29 | திராய்மடு | வீடு | கணவன் | சிறிது காலம் தொலைந்திருந்த கணவன் மீண்டும் வந்து சேர்ந்துள்ளதாகவும் வந்தவர் வீட்டுச் சாமான்கள் உட்பட உணவுப் பொருட்களை விற்று மது அருந்துவதாக முறைப்பாடு செய்யும் பெண், கணவனிடமிருந்து பிரிந்து வாழ உதவி புரியும்படி கோருகிறார். |
| 28.06.2010 | | மயிலம்பா வெளி | வீடு | அயலவர் | குறிப்பிட்ட பெண் தனது காணிக்காக குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து பணம் பெற்றதாக தெரிவிப்பதுடன் அப்பணத்தை தான் மீள வழங்கி யும் தன்னால் காணியை மீளப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என முறைப்பாடு செய்யும் பெண் தான் அக் காணியில் வாழ்வதற்கான ஏற்பாடுக ளைச் செய்து தருமாறு கோருகிறார். |
| 30.06.2010 | 22 | கல்லடி | வீடு | உறவுகள், வெளிநபர்கள் | இப் பெண் சிறு வயதில் இருந்து வெளிநபர்களின் வீட்டில் வேலை செய்து வளர்ந்து வந்துள்ளார். அச் சமயங்களில் எல்லாம் பல விதமான உடல் உளரீதியான துன்பங்களை அனுபவித்துள்ளார். தற்போது தாயுடன் சேர்ந்துள்ள இப்பெண் தாயாரும் தாயின் 2வது கணவரும் தன்னைக் கொடுமைப்படுத்துவதாகக் கூறி வீட்டை விட்டு வெளியேறி ஆலயம் ஒன்றில் தஞ்சம் அடைந் துள்ளார். தான் தங்குவதற்கு வீடு தவிர்ந்த காப்பகம் ஒன்று தேவை எனக் கோருகிறார். |

# பெண்கள் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகள்

| திகதி | வயது | வசிப்பிடம் | சம்பவம் நடந்த இடம் | குற்றம் சாட்டப்பட்டவர் | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| | 39 | தேத்தாத்தீவு | வீடு | கணவர் | "கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பு கொண்டு வீட்டை விட்டு வெளியேறி கடந்த 5 வருடங்களாக அப் பெண்ணுடன் வாழ்ந்து வருகிறார். வீட்டில் இருந்து வெளியேறுகையில் வீட்டில் இருந்த பதினொன்றரைப் பவுன் நகை, மாடு விற்ற பணம் அனைத்தையும் எடுத்துச் சென்று விட்டார்." இவ்வாறு முறைப்பாடு செய்யும் பெண் தனது பிள்ளையின் எதிர்காலத்திற்காக அப் பொருட்களை கணவனிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் தானும் பிள்ளைகளும் வாழும் வீட்டிற்கு கணவர் வந்து துன்பப்படுத்தாதிருக்கவும் உதவி புரியும்படி கோருகிறார். |

## புதிய பாதை நோக்கி .....!

உடைதல் உடைத்தல்...என்பது...., யார் கையில் ஆசை உள்ளதோ அதிகாரம் உள்ளதோ அவர்களது செயல் திறனில் நடப்பது அது. இந்த வகையில் அதிகாரம் உள்ளவர்களால் உடைக்கப்பட்டுக் கொண்டிருப்பது உயிர்களின் ஆணி வேராய் இருக்கும் எத்தனையோ பெண்களின் உள்ளங்கள் இன்று. உடைதல் என்பது அழிதல் அல்ல. எனினும் மீண்டும் மீண்டும் உள்ளம் உடையும் பெண்கள் தங்கள் வாழ்வை முடித்துக்கொள்ள முயற்சிக்கும் நிலைகள் இல்லாமல் இல்லை.

இவர்களுக்கான தற்காலிக ஆதரவுகள் கிடைத்துக் கொண்டுள்ளன. எனினும் புரையோடும் காயங்கள் போன்றது பெண்களின் இவ் வடுக்கள். ஆகவே இவர்களை இதிலிருந்து மீட்பது மிக முக்கியமாகும். அந்த வகையில் நாம் தொடர்ச்சியாக இவர்களுடன் கலந்துரையாடல்கள், கூட்டங்கள், பயிற்சி வகுப்புக்கள் போன்றவற்றை நடத்தி வருகிறோம். தங்கள் துயர் நிறைந்த கடந்த காலத்தை மீட்டிப் பார்த்தல், அக்கால வெளிகளைக் கடக்க கையாண்ட வழிகள், துடுப்பாய் கை கொடுத்தவர்கள், தற்போதைய நிலைகள், எதிர்காலக் கனவுகள், தங்கள் பாதை வழியே வரும் பெண்களுக்கான ஆலோசனைகள் போன்ற விடயங்களை இவ்வாறான நிகழ்வுகளில் மனம் விட்டு இவர்கள் பகிர்ந்து கொள்கின்றனர்.....




**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

இல.55, லேடி மன்னிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

தொ.பேசி : 065-2223297
மின்னஞ்சல் : suriyaw@slt.lk


முகவரி. ..........................................................
..........................................................
..........................................................
..........................................................